**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

H.M.O.P. No.212/2023

பெயர் : பிரியதர்ஷினி (PW1)

த/க/பெ. :

தேதி : 21.02.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

16.09.2015 ல் எங்களுக்கு திருமணம் ஆனது. திருமணம் அன்னன்பெருமாள் கோவிலில் நடைபெற்றது. வீட்டில் நிச்சயித்த திருமணம் தான். என் தந்தை பெயர் ராமதாஸ். திருமணத்திற்கு முன்பு அன்னன் பொருமாள் கோவில் என் மாமா வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். 3 வயதிலிருந்த அங்கு வளர்ந்தேன் என்றால் சரியல்ல. அது எங்கள் சொந்தஊர் அங்கு தான் வசித்து வந்தேன். என் தாயாரை திருமணம் செய்து கொடுத்தது சீர்காழி. அதே ஊரில் தான் என் மாமாவும் வசித்து வருகிறார். திருமணத்திற்கான பாத பூஜை என் மாமா மற்றும் அவர் மனைவி செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் பெற்றோர் திருமணத்திற்கு வரவில்லை என்றால் அவர்களுக்கு திருமணத்தில் உடன்பாடு இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**